# புத்தகம் பேசுகிறது...



## உலக புத்தக தின வெளியீடு
## 2012

ஆக்கம் :

அம்பிகை பஞ்சலிங்கம்
(வாசகர் வட்ட மாணவி)

வெளியீடு:

பொது நூலகம்
கோண்டாவில்
நல்லூர் பிரதேசசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவிசாளர் அவர்களின்

## ஆசிச்செய்தி...

எமது சபையின் உப அலவலகத்தின் கீழ் இயங்கும் கோண்டாவில் பொது நூலகமானது பல்வேறு நூலக வலுவூட்டல் நிகழ்வுகளை நடத்தி வருவது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தவகையில், உலக புத்த தினத்தினை முன்னிட்டு விழாவின் சிறப்பம்சங்களின் வரிசையில் **"புத்தகம் பேசுகிறது..."** என்ற சிற்றிதழ் வெளியீடானது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். நூலகத்தை நாடாதோரை சிந்திக்க வைக்கும் வகையிலும், நூலகத்தின் பயன்பற்றியும் பட விளக்கங்களோடு புனைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

இதனை ஆக்கிய இந்த நூலகத்தின் வாசகர் வட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் செல்வி. அம்பிகை பஞ்சலிங்கத்தினைப் பாராட்டாமல் இருக்க முடியாது. தனது மாணவப் பருவத்தில் அவரது உள்ளத்தில் இத்தகைய சிந்தனை எழுந்திருப்பது வரவேற்கத்தக்கது.

தொடர்ந்து இவ்வாறான ஆக்கங்களை அவர் படைக்க வேண்டும். எனவே இவரது முயற்சிகளுக்கு களம் அமைத்துக் கொடுத்த கோண்டாவில் பொது நூலகத்தின் நூலகர் மற்றும் அங்கு பணியாற்றும் நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

திரு.ப.வசந்தகுமார்,<br>
தவிசாளர்,<br>
நல்லூர் பிரதேசசபை,<br>
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளர் அவர்களின்
## ஆசிச்செய்தி....

எமது நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலக மானது மிகக்குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்து வருவதை யிட்டு செயலாளர் என்ற வகையில் பெருமையடைகின்றேன்.

உலக புத்த தினத்திலே **"புத்தகம் பேசுகிறது..."** என்ற சிற்றிதழை வெளியீடு செய்வதையிட்டு பெருமையடைகின்றேன். நூலகத்தில் காத்திரமான ஆலோசனைக்குழு, வாசகர் வட்டம், சிறுவர் வட்டம் என்பவற்றின் செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

அந்தவகையில், வாசகர் வட்ட உறுப்பினரும், யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவியுமான செல்வி அம்பிகை பஞ்சலிங்கம் அவர்களின் எண்ணங்களின் வண்ணங்கள் சிற்றிதழாக வெளிவந்துள்ளமை வரவேற்கத்தக்கது.

நூலகப் பாவணை, நூற்பாவனை என்பவற்றின் நன்மைகளை மிக அழகாக, எளிய நடையில் தெளிவாக வாசிக்கும் எவரையும் கவரத்தக்க முறையில், சிந்திக்க வைக்கும் வகையில் அவர் கையாண்டிருப்பது அவர் ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கின்றது. எனவே அவரது முயற்சிகள் மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.

மேலும், இந்நூலகமானது இது போன்ற முயற்சிகளை மேற் கொண்டு எமது பிரதேச சபையின் வளர்ச்சிப் பாதைக்கு பக்கத் துணையாக இருக்கின்ற நூலகர் அனிதா கிருஷ்ணசாமி மற்றும் அவரோடு பணியாற்றும் நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்க ளின் உழைப்பு மேலோங்கவும் இறையாசிகள் கிடைப்பதாக.

திரு. மேரி யோசப் சாந்தசீலன்,
செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை, நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகரின் வாழ்த்துச் செய்தி...

கோண்டாவில் பொது நூலகத்தினால் உலக புத்தக தினம் - 2012 இனை முன்னிட்டு வெளியிடப்படும் "புத்தகம் பேசுகிறது..." என்ற சிற்றிதழானது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

படங்களை அடிப்படையாகக்கொண்டு தனது கற்பனா சக்தியைப் பயன்படுத்தி கோண்டாவில் பொதுநூலகத்தின் வாசகர் வட்ட அங்கத்தவரான செல்வி. அம்பிகை பஞ்சலிங்கம் என்ற மாணவி இக்கதைகளை ஆக்கியுள்ளார்.

எனவே இத்தகைய பல்வேறு ஆற்றல்களையும், ஆளுமைகளையும் கொண்ட இளம் சமுதாயத்தினரை அடையாளம் கண்டு, எமது சமூகத்தின் மத்தியில் அறிமுகப்படுத்தும் கோண்டாவில் பொது நூலகத்தின் முயற்சிகள் மேலும் தொடர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

திருமதி கல்பனா சந்திரசேகர்,
சிரேஷ்ட உதவி நூலகர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலகரின் உள்ளத்திலிருந்து...

நூலக வலுவூட்டலின் மூலம் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் நூலகம் - வாசிப்பு தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடனும், கோண்டாவில் பொது நூலகம் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அதற்கு களம் அமைக்கும் வகையில் எமது நூலகத்தின் வாசகர் வட்ட அங்கத்தவரான மாணவி செல்வி. அம்பிகை பஞ்சலிங்கம் அவர்கள் தனது சிந்தனா சக்தியினால் கதைகளுக்கு ஊடாக நூலக விழிப்புணர்வை ஏற்படுத்த முற்பட்டமை பாராட்டுக்குரிய விடயமாகும்

இந்த நூலுக்கான தலைப்பு **"புத்தகம் பேசுகிறது..."** இத்தலைப்பினுடைய நோக்கம் இப்புத்தகத்தின் ஒவ்வொரு கதையும், அக்கதையினுடைய பாத்திரங்களும் புத்தகங்கள் பேசியதனால் அவர்களது வாழ்வு உயர்ந்ததை எடுத்துக்காட்டி நிற்பதனாலும், இந்தப் புத்தகம் உங்களுடன் பேசி உங்களை விழிப்படையச் செய்யும் என்ற நம்பிக்கையுடன் இந்நூலுக்கு இத்தலைப்பை வழங்கியுள்ளோம்.

இந்த நூலினை கணினியில் தட்டச்சு செய்து அழகுற சிற்றிதழாக வடிவமைத்துத் தந்த நூலகரும், எனது நண்பருமான திரு.சி.என்.எச். சாள்ஸ் அவர்களுக்கும், இவ்விதழுக்கு ஒத்துழைப்பும், ஒத்தாசையும் வழங்கிய எனது சக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

அனித்தா கிருஷ்ணசாமி,<br>
நூலகர்,<br>
பொது நூலகம்,<br>
கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து....

வாசகர் வட்ட மாணவியாகிய நான் இந்தக் கோண்டாவில் பொது நூலகத்தினால் பெரிதும் நன்மை அடைந்துள்ளேன்.

"உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"

என்ற வள்ளுவர் வாக்கை நிரூபிப்பாற்போல உருவத்திலே சிறிய இந்த நூலகம் சிறந்த பல நூல்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. இத்தகைய ஒரு நூலகம் எமது ஊரில் அமைந்ததையிட்டு பேருவகை அடைகின்றேன். இந்த நூலகத்தில் உள்ள நூல்களைப் பயன்படுத்தி பல போட்டிகளில் என்னால் வெற்றிபெற முடிந்தது என்றால் அது மிகையாகாது.

பாடசாலைக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களை யும் கொண்டு படிப்பதை இலகுவாக்கின்து. இத்தகைய நூலகத் தினைப் பயன்படுத்திய போதுதான் சிறுவர் பகுதியிலே சிங்கள மாணவர்களின் நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு இருந்ததை அவதானித்தேன்.

அப்போதுதான் தமிழ்மொழியிலே இவ்வாறான கதைகளை ஆக்கினால் என்ன? என்ற எண்ணம் என்னுள் உதித்தது. என் எண்ணத்தை நூலகரிடம் தெரிவிக்கவே அவரும் எந்தவித மறுப் பும் தெரிவிக்காமல் மிகுந்த மகிழ்ச்சியுடன் எனக்குச் சந்தர்ப்பம் தந்தார்.

குறித்த நூலை (கையாக்கப் பிரதி) தயாரிப்பதற்கான அனைத்து விதமான செலவையும் நூலகர் தாமே ஏற்றுக்கொண்டு எனது திறமையை வெளிக்கொணர்ந்து அம்பலமாக்கினார். அத்துடன் நின்று விடாமல் கையாக்கப்பிரதியை கணினி தட்டச்சுப் பிரதி யாக்கி இப்போது சிற்றிதழாக வெளியிட்டுள்ளது கோண்டாவில் பொது நூலகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய அரிய பல சேவைகள் செய்து அனைவரின் திறமையையும் வெளிப்படுத்துவதற்கு உதவிகள் புரியும் நல்லூர் பிரதேச சபையினருக்கும், கோண்டாவில் பொது நூல் நிலைய நூலகர் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துமட்டுமல்லாமல் என்னைப் போலவே ஏனையவர்களும் இந்த நூலகத்திற்கு வந்து பயனைப்பெற வேண்டும் என்றும் நல்லூர் பிரதேச சபையினர் உங்களுக்கும் களம் அமைத்துக் கொடுத்து உங்களை ஊக்குவிப்பதில் என்றும் பின்நிற்கமாட்டார்கள் என்றும் வாசகர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

இந்தச் சிறியவளின் நூல் வெளியீட்டுக்கு அனைத்து விதத்திலும் உதவி செய்தவர்களுக்கு மனமார்ந்த நன்றிகைளத் தெரிவித்துக்கொண்டு இந்நூலில் ஏதாவது குற்றம் குறைகள் இருந்தால் அவற்றை மன்னித்து மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் எனது சிற்றிதழை உங்கள் கைகளில் தவழ விடுகின்றேன்.


நன்றி.

செல்வி. அம்பிகை பஞ்சலிங்கம்,<br>இதழாசிரியர், வாசகர் வட்டம்,<br>பொது நூலகம், கோண்டாவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையின் தோழன் நூலகம்...




கேமிலா ஆறாம் வகுப்பு மாணவி. அவள் படிப்பிலும், விளையாட்டிலும் படுசுட்டி. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த போதிலும் அவளைப் பெரிய பாடசாலைக ளில் சேர்ப்பதற்கு வறுமை இடமளிக்கவில்லை. இதனால் மன முடைந்து போகவே அவளின் பெற்றோர் மிகவும் கஷ்டப்பட்டு அவளைப் பெரிய பாடசாலையில் சேர்த்தார்கள்.

"கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்ற கூற்றைப் போலவே கேமிலாவும் தான் பயிலும் பாடசாலையில் சிறந்த கெட்டிக்காரியாகத் திகழ்ந்தாள்.

ஆனால் அங்கே எதற்கெடுத்தாலும் அந்தப் புத்தகம் வேண் டும், இந்த செயல்நூல் வேண்டும் என்று ஆசிரியர் கூறிக் கொண்டே இருப்பார். ஆனால் கேமிலாவால் எதுவுமே செய்ய முடிய வில்லை.

அடுத்த நாள் ஆசிரியர் அனைவரது புத்தகங்களைப் பார்வை யிடும் வேளையில் கேமிலா மட்டும் அழுது கொண்டே இருந்தாள்.

ஆசிரியர் கேமிலாவை அன்புடன் அரவணைத்து அவளது பிரச்சினையை அறிந்து கொண்டு, அவளுக்கு நூலகத்தை அறி முகம் செய்து வைத்தார்.



அன்று நூலகம் சென்றவள்தான்! அங்கு இருக்கும் அனைத்து நூல்களையும் கற்று இன்று பிரபல வைத்தி யராகப் பணிபுரிகின்றாள்.

அவள் இன்று பெருமைப்படுவது என்னவென்றால் "தனக்கு ஆசிரியர் நூலகத் துக்குச் செல்வதற்கான பாதையைக் காட்டவில்லை தனது வள மான எதிர் காலத்திற்கான திறவு கோலைக் காட்டியிருக்கின் றார்" என்று நூலகங்களையே நன்றியுணர்வுடன் எண்ணுவது மட்டுமல்ல, தன்னை இந்நிலைக்கு உயர்த்திய அந்த நூலகத்திற்கு பல நூல்க ளையும் அன்பளிப்பும் செய்தாள்.

காரணம் என்னவெனில் நூல்களே வாங்க முடியாமல் வறுமையில் இருந்தவளை இன்று அன்பளிப்புச் செய்யும் அள விற்கு அவளை வசதி உடையவள் ஆக்கியது இந்த நூலகமன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பே வாழ்வு!

குமரன் நடுத்தர வகுப்புப் பையன். வீட்டு வசதிகள் சாதாரண மாகத்தான் இருக்கின்றன. ஆனால் மின்சார வசதி இல்லை. புத்த கங்களை வாசிப்பதில் அக்கறையுடைய இவன் நூல் நிலையங்க ளிலோ அல்லது வேறு எந்த நபர்களிடமோ நூல்களை வாங்கிப் படிப்பது வழமை. ஒருநாள் நூலகத்தில் இருந்து புத்தகங்களை எடுத்து படிக்கின்றவேளை, விளக்கு மங்கத் தொடங்கிவிட்டது. இவனுக்கு என்ன செய்வ தென்றே புரியவில்லை. "ஆஹா! நாளை இந்தப் புத்தகத்தை நூலகத்தில் கொடுக்க வேண்டுமே! என்ன செய்வது?" என்று எண்ணிணான். அப்போது தான், அவர்களின் தெருமுனையிலே மின் கம்பம் ஒன்று இருப்பது ஞாபகத்திற்கு வந்தது. அவனது முகத்தில் பிரகா' சம்; உடனடியாக ஓடிச் சென்று அந்த வெளிச் சத்திலேயே புத்த கங்களை படித்து முடித்தான். ஆனால் நித்திரை புரட்டி எடுத்தது அவனை.



வாசிக்க வேண்டும் என்ற அவசரத்தில் புத்தகத்தின் தலைப்பை வாசிக்காமல் உள் விடயங்களை வாசித்தான்.

தன்னைப்போலவே ஒரு சிறுவன் பல வருடங்களுக்கு முன் வீதி மின் கம்பத்தின் ஒளியிலிருந்து படித்தான் என்றும், ஏழையான அச்சிறுவன் நூற்கல்வியாலும், ஒழுக்கத்தாலும் அமெரிக்க நாட்டு அதிபராகவே எதிர்காலத்தில் திகழ்ந்தான் என்றும் அதில் கூறப்பட் டிருந்தது.

ஆமாம்! அவன் இப்போது தான் தலைப்பைப் பார்க்கின்றான். அங்கே "அமெரிக்க அதிபர் ஆபிரகாலம் லிங்கன்" என்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. இவனது கண்கள் தூக்கத்தை மறந்து துளிர்விடத்தொடங்கின. நானும் நாளை இந்த நாட்டை ஆளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாக வருவேன்! என்ற உறுதிமொழியை தன்னுள் எடுத்துக்கொண்டு புத்தகங்களுடன் வீடு நோக்கி நடந்தான் எதிர் காலச் சிற்பி!!!

## பாடை ஏறினும்,
## ஏடது கைவிடேல்

அடுத்த வீட்டுடன் சண்டை பிடிப்பது என்றாலே பங்கஜப் பாட்டிக்கு கை வந்த கலை. யார்? எவர் என்றெல்லாம் பார்க்க மாட்டார். வாயில் வந்த வார்த்தைகளைக் கொட்டித்தீர்த்து விடுவார். ஆனால் அவளது பேரன் செந்தூரன் படிப்பிலும், விளையாட்டிலும் படுசுட்டி. ஐந்தே வயதுதான் நிரம்பியபோதும், அதுவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த போதும் நூலகத்தை திறமையாகப் பயன்படுத்தி அவன் திறமைசாலியாகத் திகழ்ந் தான். அவனுக்கு பாட்டியின் நடவடிக்கைகள் பிடிக்கவில்லை. பங்கஜம் வாய்க்காரியாக இருந்தபோதும், எழுத வாசிகத் தெரியும். அதனை நன்கு உணர்ந்த செந்துரன் அவளுக்கும் நூல்நிலையத்தில் இருந்து புத்தகங்களை எடுத்துக் கொடுத்தான். என்னதான் சண்டைக்காரியாக இருந்தாலும் பேரன் மீது கொண்ட அன்பினால் அவன் சொன்னபடியே நூல்களை வாசிக்கத் தொடங்கினாள். நாளடைவில் நூல்களுக்கே அடிமையாகினாள்.



மற்றவர்களுடன் வீண் பேச்சுப்பேசுவதைத் தவிர்த்தாள்

இதுவரை காலமும் இருந்த அவளை இந்நிலைக்கு மாற்றியது புத்தகமல்லவா "நான் இவ்வளவு காலத்தையும் வீணாக்கி விட் டேனே" எனக் கவலைப்பட்டாள்

எனினும் நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், இனி நான் சாகும்வரை படிப்பேன் என்ற மன உறுதியுடன் இன்றும் புத்தகங்களை வாசிக்கின்றாள்.

செந்தூரனுக்கு ஒரே மகிழ்ச்சி!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலைவே ஆகுமாம் நுண்ணறிவு!

கபில் அவசரமாக தன் வேலைகளை முடித்தான். அவன் அந்த வீட்டின் வேலைக்காரன். ஆனால் சிறியவன். குடும்பக்கஷ்டம் காரணமாக ஒரு பணக்கார வீட்டின் வேலைக்காரனாகி விட்டான். அவன் மிகவும் அக்கறையோடு தனது வேலையைக் கவனித்து வந்தான். அந்த வீட்டு அம்மாவும் அவனைப் பரிவோடு நோக்குவார். அவரின் பிள்ளைகள் மூவரிலும் மூத்த மகன் கபிலின் வயதை ஒத்தவன். அந்த வீட்டின் பிள்ளைகள் நிறைய நூல்களை வாசிப் பதையும் தாயும் தந்தையும் பிள்ளைகளை நூலகத்திற்கு அழைத் துச் சென்று விரும்பிய நூல்கள் பலவற்றையும் படிப்பதையும் கபில் காண்பதுண்டு.

அவன் தன் வேலைகளை விரைவாகச் செய்து முடித்து விட்டு அவ்வீட்டுப் பிள்ளைகளின் நூலை வாங்கி வாசிப்பான். அவன் நூல் வாசிப்பதில் சரியான கெட்டிக்காரன். அவனின் கெட்டித் தனத்தைக் கண்ட அவ்வீட்டு அம்மா அவனைப் பள்ளியில் சென்று படிக்குமாறு வற்புறுத்தினார். அவனும் அந்த அம்மாவின் சொல்லைத் தட்டாமல் வேலைகளை முடித்துக்கொண்டு பள்ளி சென்று வந்தான். பரீட்சைகள் நெருங்கும் வேளையில் அவன் நூலகம் சென்று அங்குள்ள பாட நூல்களையும், செயல் நூல்களையும் பணச் செலவின்றி பெற்றுக் கற்றான். என்ன ஆச்சரியம்! பரீட்சையில் அந்த வீட்டுப் பிள்ளைகளைவிட அவன் அதிக புள்ளிகளைப் பெற்றிருந்தான்.



வீட்டு எஜமானி அம்மா மிகவும் சந்தோசமடைந்தார். அது மட்டுமல்லாமல் அவனை மேல் படிப்பு படிப்பதற்கும் உதவி புரிந்தார். கபில் மிகுந்த உற்சாகத்தோடு பட்டதாரியாகும் கனவோடு தனது மேற்படிப்பைத் தொடர்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்களே நிம்மதி

அந்த வீட்டின் ஓரத்திலே அமைதியாக உட்கார்ந்திருந்தது புத்தகம். அது மிகுந்த வேதனையுடன் காணப்பட்டது. தன்னைத் தீண்டுவார் இல்லாமல் தனியே இருந்து கொண்டே அந்த வீட்டில் நிகழ்பவற்றைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது. சில மாதங்களுக்கு முன் அவ் வீட்டினரின் செல்லப் பிள்ளையாக இருந்தது புத்தகம். ஆமாம்!



ஆழமான கருத்துக்கள், அழகான படங்கள், அருமையான அறிவுத் துளிகள், வீட்டில் அனைவருக்கும் பாவனைக் கேற்ற பயனைத் தந்த அந்தப் புத்தகம் ஏன் இன்று எடுப்பார் இல்லாமல் தவம் கிடக்கின்றது.

அப்படி என்னதான் அந்த வீட்டில் நடக்கிறது.

ஆமாம் அந்த வீட்டில் இப்போது தொலைபேசி, தொலைக்காட்சி, வானொலி, கணினி போன்றவை குடியேறிவிட்டன. புத்தகத்தில் கவனம் செலுத்தாமல் அவ் வீட்டினர் தொலைபேசியுடனும், தொலைக் காட்சியுடனும் தமது பொழுதைப் போக்கினர். புத்தகமோ உள்ளே மனவேதனையுடன் புளுங்கிக் கொண்டிருந்தது. அந்த வீட்டினர் மிகுந்த சந்தோசத்தோடு வீட்டிலிருந்தபடியே நேரம் தவறாமல் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளை இரசித்துக் கொண்டிருந்தனர்.



ஒரு நாள் அந்த வீட்டில் மின்சாரம் தடைப்பட்டது. வீட்டினரால் தொலைக்காட்சி, வானொலியுடன் பொழுதைக்கழிக்க முடியவில்லை. மின்சாரம் தடைப்பட்ட தால் மிகவும் வேதனைப்பட்டார்கள். எப்போது மின்சாரம் வரும் என ஏங்கினார்கள். ஏதோ பாரிய திருத்த வேலைகள் காரணமாக மின்சாரம் வர இரண்டு வாரங்களாவது பிடிக்கும் என பத்திரிகையில் வந்த செய்தி அவர்களைத் தவிக்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண் டிருந்த புத்தகத்திற்குச் சந்தோசம் தாளவில்லை. நடப் பதை வேடிக்கை பார்த்தது.



அவ்வீட்டினர் ரசனை மிக்க தமக்குள்ளே பேசிக்கொண்டு இருந்த விடயம் புத்தகத்தின் காதினுள் தேனாகப் பாய்ந்தது. "உந்த மின்சாரத்தை நம்ப இய லாது. அதோட மின்சாரக் கட்டணமும் அதிகம் கட்டவேண்டியிருக்கு. எல்லா நேரமும் இதுகளோட இருக்க வேண்டியிருக்கு. புத்தகம் நாம் விரும்பிய நேரமெல்லாம் படிக்கலாம். மின்சாரம் தேவையில்லை. குப்பி விளக்கிலேனும் படிக்கலாம். புத்தகம் ஒரு அருமையான நண்பன் அல்லவா "நூலகம் சென்றாலே நிம்மதி" புத்தகம் புன்னகைத்தது.

# பிறந்தநாள் பரிசு

அப்பா அவசரமாக அலுவலகம் புறப்பட்டார். வீட்டின் முற்றத்தில் தீபன் நின்றிருந்தான். அப்பா!.... "நாளை எனது பிறந்தினம்" என் றான். அப்பாவுக்கு அப்போது தான் அலுவலக கணக்காளர் கவிப்பிரியனின் பிறந்தநாள் நினைவுக்கு வந்தது. அன்று மாலை பிறந்த நாள் விழா வுக்கு கவிப்பிரியன் வீட் டிற்குச் செல்ல வேண்டு மென எனஅப்பா யோசித் தார். பிறந்த நாள் பரிசாக பொருள் வாங்கலாம். பணமும் குறைவாக இருப்பதை அப்பா உணர்ந்து கொண் டார். என்ன பரிசு வாங்கலாம்? என யோசித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவான பணத்தில் நிறைவான பரிசில் வாங்க வேண்டும் எனத் திட்டம் தீட்டினார். என்ன வாங்கலாம்? மூளையைக் குடைந்து குடைந்து சிந்தித்தார். அவர் முகத்தில் புன்னகை!

ஆமாம் அவர் பிறந்த நாள் பரிசாக நூல் ஒன்றை வாங்கிக் கொண்டார்.

"நூலுக்காகச் செலவிடும் பணம் செலவல்ல
மூலதனமே"

என்ற வரிகள் அந்த அந்த நூலின் மட்டையில், அலங்கரிக்கும் பொருட்டு எழுதப்பட்ட அமுதவாக்காக காணப்பட்டது. அந்த வாக்கியம் அவர் மனதைக் கவர்ந்ததில் ஆச்சரியமில்லைத்தானே! நாமும் பிறந்த நாள் பரிசாக நூலொன்றை வழங்கினால் என்ன?

# ஊனம் உயர்வுக்கு தடையல்ல!

தனசேகரம் தான் அந்த ஊரிலேயே மிகவும் பணக்காரன். அந்த தனசேகரத்தினதும் சுந்தரியினுடைய மகன்தான் விஷால்.அவன் மிகுந்த துடிப்புடையவன். எதையும் ஆராய்கின்ற இயல்புடையவன். விஷால் தனது ஓய்வு நேரங்களில் நூலகங்களில் சென்று பலவிதமான நூல்களைக் கற்பான். தனது வயதுக்கு மீறிய அறிவை கொண்டிருந்தமையால் ஆசிரியரால் பெரிதும் விரும்பப்படுபவன்.

ஒரு நாள் தன் பெற்றோருடன் விஷால் கடற்கரைக்கு சென் றான் அங்கே ஏதோ ஒன்று தென்படவே ஆராயும் இயல்புடைய விஷால் அதனை எடுக்க முற்பட்டவேளை, அந்தோ பரிதாபம்! அது மிதிவெடி...! அந்த வெடி அவனது பெற்றோரையே மேலோகம் அழைத்துச் சென்றது. இவனது கால்களையும் ஊனமாக்கியது.

ஊனமான கால்களுடன் தனது உறவுகளை இழந்த விஷால் ஊருக்கு வரவே அவனை அனைவரும் ஒதுக்கி விட்டார்கள்.

இவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை சிகிச்சை யின் போது மருத்துவமனை கொடுத்த முச்சக்கர வண்டியை ஓட்டிய படியே நூல் நிலையத்திற்குச் சென்று நூல்களைக் கற்றுத் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுகளைப் பொன்னாக்கினான்.

அவனை அன்போடு அரவணைத்து மன வலிமையூட்டும் தாயாக புத்தகங்கள் திகழ்ந்தன. அது மட்டுமல்லாமல் அறிவூட்டும் நல்ல தகப்பனாகவும், நகைச்சுவை கூறும் நல்ல நண்பனாகவும் உணர்வு களைத் தூண்டும் சிறந்த உறவுகளாகவும் புத்தகங்கள் திகழ்ந்தன. இவனுக்கு நூல்கள் "கால்களில் மட்டும் தான் ஊனம். மனம் என்றும் திடமே" என்ற உண்மையை உணர்த்தின நல்ல நூல்கள். இவனின் கற்றறியும் ஆர்வத்தைக் கண்ட நூலகர் அவனை அணுகி அவனைப் பற்றித் தெரிந்து கொண்டு அவனை விடுதி ஒன்றிலே சேர்த்துவிட்டார். அவன் கல்வியை விடாது தொடர நூலகம் நல்ல நண்பனாய்க் கை கொடுத்தது. அவனும் நன்றாகப் பயின்றான். நல்ல வசதியுடையவனானான். தனது வசதியைக் கொண்டே பொய்க்காலை சத்திர சிகிச்சை மூலம் பொருத்திக் கொண்டான். அதுமட்டுமல்லாமல் மிகப் பெரிய சத்திர சிகிச்சை வல்லுநர் ஆனான். அதுவும் மாற்று வலுவுடைய மக்களுக்கு இலவசமாக சத்திர சிகிச்சை செய்கின்றான்.



இவன் இத்துணை பெரிய மனிதனாக இருந்தாலும் "ஊனமாக இருந்த தன்னை உயிருள்ளவனாக்கி, உள்ளத்திற்கு உரமூட்டிய அந்த நூலகத்திற்கு இன்றும் நிதியுதவி செய்கின்றான்" காரணம் என்னவெனில் ஊனமாக இருந்த விஷாலை உயர்த்திய நூலகத்தை உயர்த்த வேண்டுமன்றோ!

---

நாம் ஒருவருக்கொருவர் ஒரு ரூபாய் கொடுத்தால்,
நம் இருவரிடமும் ஒரு ரூபாய் தான் இருக்கும்.
நாம் ஒருவருக்கொருவர் ஒரு நல்ல எண்ணத்தை பகிர்ந்தால்,
நம் இருவரிடமும் இரு நல்ல எண்ணங்கள் இருக்கும்

– ஆப்ரகாம் லிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த 2011 இல் இடம்பெற்ற

## உலக புத்தக நினைவுகள்...







**அறிவு வளர்ச்சிக்கான அடையாளமே புத்தகங்கள்**
**அந்தப் புத்தகப் பூக்கள்**
**பூத்துக் குலுங்கும் சோலையே நூலகமாகும்**

---

வெற்றிக்குப் பிறகு
தொடர்ந்து உழைப்பதை நிறுத்த வேண்டாம்
தோல்விக்குப் பிறகு
தொடர்ந்து முயல்வதை நிறுத்த வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org